RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2039

OPEN ACCESS

# பாண்டிச்சி புதினத்தில் மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவுகள்

அ. செல்வி [அ, *], இரா. கலைச்செல்வி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம்-637401, தமிழ்நாடு, இந்தியா

# Relationships between Man and Nature in the Paandichi Novel

A. Selvi [a, *], R. Kalaiselvi [a]

[a] Department of Tamil, Thiruvalluvar Government Arts College College Rasipuram-637401, Tamil Nadu, India

* Corresponding Author:
selvi23630@gmail.com

Received: 30-06-2022
Revised: 07-10-2022
Accepted: 13-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Our ancestors lived in harmony with nature. Nature is a gift to living beings. The gifts of nature are incalculable, such as the towering mountains, forests, green grasslands, water bodies, fields, trees, plants, vines, and wild animals. Thus, in the novel Paandichi written by Alli Fathima, it is known that the relationship between man and nature is different, such as the natural home of the people of Ponvalakadu Mudukudi, the earthworm laboratory, the natural office, the relationship of the animals, the natural tuber, the relationship between man and earth, the relationship between man and the earth air, the relationship between man and death, the relationship between man and the bird, the relationship between man and the snake, the relationship between man and the bamboo tree, etc.

**Keywords:** Nature, Relationship, Alli Fathima, Paandichi

## முன்னுரை

நம் முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்துள்ளனர். இயற்கை என்பது உயிரினங்களுக்குக் கிடைத்த வரமாகும். உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், மரம், செடி, கொடிகளான தாவரங்கள், வன விலங்குகள் என இயற்கையின் கொடைகள் கணக்கில் அடங்காதவைகள் ஆகும். அவ்வகையில் அல்லிபாத்திமா அவர்கள் எழுதிய பாண்டிச்சி புதினத்தில் பொன்வளக்காடு முதுகுடி மலைவாழ் மக்களின் இயற்கையான வீடு, மண்புழு ஆராய்ச்சிக்கூடம், இயற்கையான அலுவலகம், விலங்கினங்களின் உறவு, இயற்கையான கிழங்கு, மனிதனுக்கும் மண் காற்றுக்குமான உறவு, பிறப்பு இறப்புக்கான உறவு மனிதனுக்கும் பறவைக்குமான உறவு, மனிதனுக்கும் பாம்புக்குமான உறவு, மனிதனுக்கும் தேன் எடுத்தலுக்குமான உறவு, மனிதனுக்கும் மூங்கில் மரத்துக்குமான உறவு என மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவுகள் பல்வேறு வகையில் உள்ளன என்பதை அறிய முடிகிறது.

மனித வாழ்வு இயற்கையோடு இணைந்துள்ளது. மனிதனைச் சுற்றி ஐம்பூதங்களான நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் என இயற்கையால் சூழப்பட்டுள்ளது.

“நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின”

என்று தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் ஐம்பெரும்பூதங்களில் அடங்கியது என்று கூறியுள்ளார் (Subramanian, 2008). எனவே இயற்கையாகவே உலகத்தில் வாழும் மனிதன் இயற்கையைச் சார்ந்துள்ளான். இயற்கையை போற்றாத கவிஞர்களும் இல்லை.

"விரிந்த வானே வெளியே - எங்கும்

விளைந்த பொருளின் முதலே

திரிந்த காற்றும் புனலும் - மண்ணும்

செந்நீ யாவும் தந்தோய்

தெரிந்த கதிரும் நிலவும் - பலவாச்

செரிந்த உலகின் வித்தே

புரிந்த உன்றன் செயல்கள் - எல்லாம்

புதுமை! புதுமை! புதுமை"

என்ற பாடல் வரிகள் மூலம் இயற்கைச் செல்வம் பற்றிப் பாரதிதாசன் புகழ்ந்து கூறியுள்ளார் (Bharathidhasan, 2005). பாண்டிச்சி புதினத்தில் மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவுகள் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## இயற்கையான வீடு

"காணிநிலம் வேண்டும் - பராசக்தி

காணிநிலம் வேண்டும் - அங்கு

தூணி லழகியதாய் - நன்மாடங்கள்

துய்ய நிறத்தினவாய் - ஓர் மாளிகை

கட்டித் தர வேண்டும் - அங்கு

கேணி யருகினிலே - தென்னை மரம்

கீற்று மிள நீரும்"

என்ற பாடல் வரிகள் மூலம் காணி நிலம் பற்றி பாரதியார் இயற்கையோடு எவ்வாறு வீடு அமைதல் வேண்டும் என்று புகழ்ந்து பாடியுள்ளார் (Bharathiyar, 2019).

"வட்ட வடிவ அமைப்புடன் அமைந்திருந்தது. அந்தக்குடிசை, மரப்பலகைகளை அப்படியே தரையில் பதித்திருந்தார்கள். இருக்கைகளும், மேசைகளும் மரக்கட்டைகளைச் செதுக்கி எடுக்காமல் அதன் அமைப்பிலேயே ஒழுங்குபடுத்திப் போட்டிருந்தார்கள். பச்சை வண்ணம் பூசப்பட்டிருந்த அக்குடிசையின் உள்ளே படுக்கையும், அதனோடு சேர்ந்து ஒரு குளியலறையும் இணைத்துத் தேவையான வசதிகள் செய்யப்பட்டிருந்தன." என்ற பாண்டிச்சி புதினத்தின் வரிகள் மூலம் மனிதன் மரத்தைப் பயன்படுத்தி தனது குடிசையினை பல்வேறு வசதிகளுடன் இயற்கையைப் பயன்படுத்தி அமைத்திருப்பதைக் காண முடிகிறது. இப்பொழுதும் சமுதாயத்தில் மக்கள் தனது வீடுகளை மரத்தை பயன்படுத்தி சன்னல், கதவு போன்றவற்றைக் கட்டுகின்றனர். ஏழை எளிய மக்களும் தென்னங்கீற்றாலும், பனையோலையாலும், மூங்கில்களாலும் ஆன வீடுகள் கட்டியிருப்பதையும் கண் கூடாக காண்கிறோம் (Alli Fathima, 2022).

### மண்புழு ஆராய்ச்சிக்கூடம்

"சார்... நீங்க நல்ல மலையாளம் பேசுறீங்க! சியாமா வியந்தாள் "ம்... நான் இங்கு வந்து பத்து வருசம் ஆயிருச்சி கேரள அரசு வேலைன்றதால மலையாளம் பழகிருச்சி அப்புறம் சுருளிமலை அடிவாரத்துல என் மனைவி மண்புழு ஆராய்ச்சிக்கூடம் வெச்சுருக்கிறாங்க.... அவங்களுக்கும் உதவியா இருக்கேன் என்றார்" என்பதன் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மக்கள் இயற்கையான மண்புழு பயன்படுத்தி விவசாயம் செய்தவர்கள் என்பதை மண்புழு ஆராய்ச்சிக்கூடம் மூலம் அறிய முடிகிறது

(Alli Fathima, 2022). சமூகத்தில் மக்கள் தற்பொழுதும் விவசாயம் செய்ய பலவகையான உரம், மருந்துகளைப் பயன்படுத்தியும் மண்புழு உரங்களைப் பயன்படுத்தியும் விவசாயம் செய்கின்றனர்.

## அலுவலகம்

"பரந்து விரிந்த பள்ளத்தாக்கு போன்ற அந்த இடம் தொலைவில் தொடர் மலைகள், இளங்காற்று தாலாட்டும் தூய மலர் வனமாய்க் காட்சியளித்தது. கொஞ்சம் தூர -மாய்க் குட்டி அரண்மனை போல ஒரு வீடு தென்பட்டது. எல்லாமே இயற்கையான பொருட்காலே கட்டப்பட்டிருந்தன. நெருக்கமான அடுக்கப்பட்ட மூங்கில்கள். தடிமனான மர சன்னல்கள் நல்ல கலைநுட்பத்துடன் மரப்பலகைகளில் ஓவியங்கள் வரைந்து தொங்கவிடப்பட்டு இருந்தன. கிளிகளின் ஓசையும் எங்கோ தள தள என வழியும் அருவியின் ஓசையும் தவிர வேறு எந்தச் சப்தமும் கேட்கவில்லை" என்ற பாண்டிச்சி புதினத்தின் வரிகள் மூலம் அலுவலகத்தை இயற்கையான முறையில் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. இன்றைய நாகரீக காலத்திலும் மக்கள் தனது அலுவலகத்தில் மரம், செடி, கொடிகள் என பலவகையில் அமைத்து உள்ளார்கள் (Alli Fathima, 2022).

## விலங்கினங்களின் உறவு

### யானை

"எங்கோ தூரத்தில் யானையின் பிளிறல் கேட்க மாறன் வேகமாக ஒரு தீப்பந்தத்தைக் கொளுத்தி வாசல் பக்கம் ஊன்றியிருந்த தூண் போன்ற ஒன்றில் செருகினார்" என்பதன் மூலம் பாண்டிச்சி புதினத்தின் மக்கள் தன்னை யானையிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள தீபந்தத்தை தனது வீட்டு வாசலில் வைத்ததை அறிய முடிகிறது (Alli Fathima, 2022). இப்பொழுதும் கூட கோயம்புத்தூர் ஆனை மலை, நிலகிரி போன்ற இடங்களில் யானைகளின் அட்டகாசம் இருப்பதை நாம் காண முடிகிறது.

"அப்பா.... மூப்பன் குழிமாடத்துல கொம்பன் சுத்துறானாம் முருகன் கொஞ்சம் பயத்துடன் சொன்னான். "போடா போ... மிருகங்க நன்றியுள்ளவை... மூப்பன் மேல வச்ச பாசம். அவரு காலமானதைத் தாங்க முடியாம குழிமாடத்துல காவலிருக்கு... யாருக்கும் தீங்கு செய்யாது.... சில சமயம் குறும்பன் கூட வந்து போவான். "அலட்சியமாகப் பதில் சொன்னார்" என்ற பாண்டிச்சி வரிகள் மூலம் கொம்பன் என்றால் யானை, குறும்பன் என்றால் புலி. மூப்பன் என்பவர் இறந்து அடக்கம் செய்த குழிமாடத்தில் யானை, புலி பாசத்தால் வந்து போவதை காண முடிகிறது. இன்றைய சமுதாயத்திலும் மனிதர்கள் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வளர்க்கின்றனர். அவைகளின்மீது பாசம் வைத்துள்ளனர். வீட்டுக் காவலுக்கும் வைத்துள்ளனர் (Alli Fathima, 2022).

## குறும்பா

பாண்டிச்சி புதினத்தில் முத்துவீரன் என்பவன் ஒரு பெண்ணுக்கு கற்பு சூரையாடியதால் ஊர் தலைவர் மூப்பன் என்பவர் புலியை அழைத்து கொல்லும்படி செய்து விட்டார்.

"குறும்பா... உட்காட்டை நோக்கிப் பாய்ந்த மூப்பனின் குரலில் அந்தக் குடியே சற்று அதிர்ந்து ஒடுங்கியது. அதிகாலையிலே செந்தில்குமார் அரக்கப்பரக்க ஓடி வந்தார்... "மூப்பா... முத்துவீரனக்கூட்டி போக போலீஸ் தேடி வந்தது அவனக் காணலயாம். காட்டுக்குள்ள தேடிப் போக புலி அடிச்சுப் போட்டுக்காம்... அந்த சாவுச் செய்தி மூப்பனில் ஒரு புன்னைகய ஏற்படுத்தியது" என்பதன் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மூப்பன் புலியை பழக்கப் படுத்தி வைத்திருப்பதன் மூலம் புலி ஒருவனை கொல்ல சொன்னதும் கொன்றுவிட்டதை அறிய முடிகிறது (Alli Fathima, 2022). மனிதனுக்கும் விலங்கிற்குமான உறவு நன்கு புலப்படுகின்றது. மேலும் மனிதனின் விலங்கினங்களிடமும் உறவு கொண்டுள்ளதை அறிய முடிகிறது. பொதுவாகவே சமூகத்தில் வாழும் மக்கள் குரங்கு, நாய், பூனை போன்றவைகளை வா என்றால் வருதலும் போ என்றால் போதலுமாக பழக்கி வைத்துள்ளனர்.

## இயற்கையான கிழங்கு

“இது சாதாரண கிழங்கல்ல… இதோட பேரு “சிற்றிந்த, இந்தக் கிழங்கை அப்படியே அவிச்சுச் சாப்பிட்டா பைத்தியம் பிடித்து விடும். ஆனால் துணியில் கட்டி ஏழு நாட்கள் ஓடும் தண்ணீல ஊறவச்சு ஒழுக்கு நீரில் இதன் கசப்பு மாறியதும் அவிப்பாங்க. விருந்தாளு வந்தால் கண்டிப்பாக இதைப் பரிமாறுவாங்க…” என்ற பாண்டிச்சியின் வரிகள் மூலம் மனிதன் இயற்கையோடு இணைந்த கிழங்கை உணவாக உண்டுள்ளதை காண முடிகிறது. சமூகத்திலும் இயற்கையான கிழங்குகளான சர்க்கரை வள்ளி கிழங்கு, சப்பாத்திக் கிழங்கு, வெற்றிலைக்கொடிக் கிழங்கு என பலவகையான கிழங்குகளை உண்கின்றனர் (Alli Fathima, 2022).

## மனிதனுக்கும் மண்ணுக்குமான உறவு

“அப்புறம் கதிர் இவங்க பொதுவா வணங்குற தெய்வம் எது தெரியுமா? “மண்முத்தி, மண்முத்தின்னா? இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த முருகன் குறுக்கிட்டான்… ”சாரே முத்தினா முத்தச்சி…. பாட்டி… மண் முத்தினா,.. இந்த பூமி, எங்க சாமி… இந்த பூமியத்தான் நாங்க வணங்குகிறோம். எங்களுக்குச் சோறு போடுற இந்த மண் எங்க சாவேர் (மரணமடைந்தவர்கள்) புதஞ்ச இந்த நிலந்தான் எங்கள வாழ வைக்கும் தெய்வம். இங்கு இருக்குற புல் பூண்டக்கூட மண்ணுட்ட மன்னிப்புக் கேட்டப் பிறகு தான் பறிப்போம்… சுத்திச் சுத்தி இருக்கற மரங்களும் உயிர்களும் வன தேவதை தந்த வரம் சாரே… அத அழிக்க நாங்க சம்மதிக்கவே மாட்டோம” முருகன் உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொணடிருந்தான்.” என்பதன் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மக்கள் மண்ணை தன் முன்னோர்களாகவும், சாமியாகவும், தெய்வமாகவும் தன் உயிரியின் மேலாக மதிக்கின்றனர் (Alli Fathima, 2022). இயற்கையான ஒரு புல் பூண்டக்கூட மண்ணுட்ட மன்னிப்புக் கேட்ட பிறகு தான் பறிப்போம் என்பதில் இருந்து இயற்கையின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளதை அறிய முடிகிறது. தற்காலத்திலும் துளசி செடி மாடம் அமைத்து சாமியாக கும்பிடும் வழக்கம் உள்ளது.

## மனிதனுக்கும் காற்றுக்குமான உறவு

”வாழை மட்டைகளைச் சதுர வடிவில் அமைத்து நிறுத்தியிருந்தனர். பக்கத்தில் பழங்களும், கிழங்குகளும், பூக்களும், அருகப் புல்லும் வைக்கப்பட்டிருந்தன. “முருகா…. என்ன இது எந்தத் தெய்வத்தையும் காணலையே…? ”சாரே எங்க தெய்வமே மண்ணும், காத்தும்தான் அங்க நீங்க பாத்தது எங்க தெய்வந்தான். வாழை மட்டைகளுக்கு இடையில் தெரியுற காத்துதான் தெய்வம் அதைதான் வணங்குறாங்க காணிக்காரன் முருக்கான் வச்சு கைபுடிச்சுக் கொடுக்கற கலியாணம் நடக்குது…” என்ற வரிகள் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மக்கள் காற்றை தெய்வமாக வணங்குகின்றனர் என்பதை அறிய முடிகிறது (Alli Fathima, 2022). தற்பொழுதும் வாயு பகவான் என்னும் கடவுளை மக்கள் வணங்குகின்றனர்.

## பிறப்பு இறப்புகான உறவு

பாண்டிச்சி புதினத்தில் குழந்தை பிறந்து பதினெட்டாம் நாள் காத்துக்கருப்பு அண்டாம இருக்க இடுப்பில் சரடு கட்டிவிடுவது ஒரு விழாவாக கொண்டாடுவார்கள். அதனை நூலுகட்டு விழா எனக் கூறுவர்.

“செல்வன்… அந்த மேடையில வச்சிருந்த பாய் ஒருவித காட்டு ஈந்தையால் பின்னப்பட்டது. அது சாவுக்கான அடையாளம்… மனிதன் பிறப்பைக் கொண்டாடும் போதெல்லாம்… இறப்பு மனசுக்குள்ள வரணும் என்பதற்காக அங்க வைக்கப்பட்டிருக்கும். இந்த மண்ணில் பிறந்து மண்ணுல புதைஞ்ச மண்ணாப் போற ஜென்மம் நம்மளோடது. அதுக்கு இடைப்பட்ட காலத்துல தலைக்கனம், திமிர் புடிச்சு ஆடாம இருக்கணும்னு சொல்றதுக்கு நூலுகட்டு நாள்ல அந்தப் பாயை அம்பலத்துல வைப்பாங்க…” என்ற பாண்டிச்சி புதினத்தின் வரிகள் மூலம் பிறப்பு இறப்பு இயற்கையானது. ஆனால் பிறப்பு கொண்டாடும் பொழுது இறப்பு உண்டு என்பதை உணர்ந்தும் வகையில் காட்டு ஈந்தையால்

பின்னப்பட்டது (Alli Fathima, 2022). அது சாவுக்கான அடையாளமாக கொண்டுள்ளனர். இப்பொழுதும் சமூகத்தில் மனிதன் இறந்து விட்டால் வீட்டில் உள்ள பாயில் போடுகின்றதை நாம் அறிந்தவையாகும்.

## மனிதனுக்கும் பறவைக்குமான உறவு

பாண்டிச்சி புதினத்தில் நீலி என்ற பெண்ணை முத்துவீரன் என்பவர் கற்பை சூரையாடியதால் நீலி மயங்கி குத்துயிரும் குலயிருமாக கிடந்தாள்.

“அவள எண்ணெத் தோணியில் கிடத்து… மூப்பன் கட்டளை கதறல்களுக்கிடையே ஒலித்தது. எறும்புகள் போல அங்குமிங்கும் ஓடிய பெண்களும் ஆண்களும் ஏதேதோ தைலங்களை எண்ணெய்களை எடுத்து வந்தார்கள். நீலியை நுதலியின் குடிசைக்குள் அலுங்காமல் தூக்கிச் சென்றார்கள். பாண்டிச்சி அமுதபடியே உள்ளே சென்றாள். தூரத்தில் கூவிலான் பறவை உறக்க அலற அத்தனை இதயங்களும் ஒரு நிமிடம் நின்று காட்டுக்குள் கனத்த மௌனம் பரவியது.” கூவிலான் பறவை அலறினால் சாவு நிச்சயம் நடக்கும் என்பது பாண்டிச்சி மக்களின் நம்பிக்கைகள் ஆகும் (Alli Fathima, 2022). இப்பொழுதும் மக்களிடையே ஆந்தை அலறினால் சாவு நடக்கும் என்பதும் ஒரு நம்பிக்கை ஆகும்.

## மனிதனுக்கும் பாம்புக்குமான உறவு

“என்ன செடி முருகா இது?…. சுந்தர் மூக்கைச் சுழித்தான் பாம்பு விரட்டி சாரே…. லேசா வெயில் காயுதில்ல… பாம்பு வெளியில வரலாம்…. வீட்டு முத்தத்துல வைக்க எடுத்தேன்” என்ற பாண்டிச்சி புதினத்தின் வரிகள் மூலம் மனிதன் ஒரு பாம்பு வாராமல் இருப்பதற்கான செடியை பயன்படுத்தியுள்ளதன் மூலம் இயற்கையுடன் மனிதன் இணைந்துள்ளான் என்பதை அறிய முடிகிறது (Alli Fathima, 2022). கிராம புறத்திலும் பாம்பு வராமல் இருக்க கொண்ணத்தழை என்னும் தழையைப் பயன்படுத்துகின்றனர்.

## மனிதனுக்கும் தேன் எடுத்தலுக்குமான உறவு

“உயரமான மரங்களின் உச்சியில் ஒட்டியிருக்கும் தேனைக்கூட மிக லாவமாக எடுத்துவதை செல்வன் கவனித்திருக்கிறான். தேன் துளித் துளியாகக் கீழே விழத் தொடங்கியதும் தாய்த் தேனீ என்று இவர்கள் அழைக்கும் இராணித் தேனீ இல்லாத போது உடம்பெல்லாம் தேங்காய் எண்ணெய் தேய்த்து முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு விறுவிறுவென மரத்தில் ஏறி, தேன் கூட்டை புகையிட்டுக் கலைக்கின்றனர். தாய்தேனீ வேறு கூடுகட்ட ஏதுவாக அதைத் துன்புறுத்துவதில்லை. இயற்கையுடன் இவ்வளவு இயைந்த ஒரு வாழ்க்கையா?… எனப் பலமுறை ஆச்சரியத்தில் மனம் சிலிர்த்துப் போகிறது.” என்ற வரிகள் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மனிதன் ஒரு தேனீக்குக் கூட நீங்கு நினைக்காமல் வேறு கூடு கட்ட தேனீகளை விட்டுவிடுவதில் இருந்து நமக்கு நன்கு புலப்படுகின்றது (Alli Fathima, 2022). மனிதன் இயற்கையின் மீது எவ்வளவு அக்கறைக் கொண்டுள்ளான் என்பதை அறிய முடிகிறது.

## மனிதனுக்கும் மூங்கில் மரத்துக்குமான உறவு

“இதென்ன… மூங்கில் மரத்துக்குக் கீழே ரொம்ப சுத்தாமயிருக்கு எப்பவுமே தூத்துத் துடைச்சுப் போட்ட மாதரி!…. மாயா வியப்புடன் கேட்டாள். முருகனும் ராமியும் ஒரு நிமிடம் நின்று மரங்களைப் பார்த்துக் கும்பிட்டனர். ஏதோ பெருமிதம் இருவர் முகத்திலும், ”ஈ, மரம்… வனதேவத குடியிருக்கும் இடம்…! மென்மையான குரலில் மெதுவாகப் பேசினாள் ராமி. ”தேவத சந்தோசத்துல இருக்கும் போ… இந்த மரம் பூக்கும்… பூத்துருச்சுன்னா எங்களுக்கு நல்லது வரும்…” ராமி மரத்தைப் பார்த்துக் கொண்டே ஆர்வம் பொங்க பேசினாள்.” என்பதன் மூலம் பாண்டிச்சி புதினத்தில் மக்கள் மூங்கில் மரத்தை வனதேவதை குடியிருக்கும் மரமாகவும் அதனை தெய்வமாகவும் வணங்குவதை காண முடிகிறது (Alli Fathima, 2022).

பாண்டிச்சி புதினத்தில் மூங்கில் மரத்தைப் பயன்படுத்தி அழைப்பு மணி, மூங்கில் கூடை, புல்லாங்குழல்கள், ஊஞ்சல்கள், நாற்காலிகள், சுவர்மாட்டிகள் என பல பொருள்களை செய்து உள்ளார் ராமு தாத்தா.

“என்ன செல்வா ராமு தாத்தாவைப் பார்க்கப் போனீங்களா… அவர் மூங்கில் பொருட்கள் செய்றதுல வல்லவர்… தானாகவே கற்றுக் கொண்ட வித்தை… தேவையான மூங்கிலை நடுகாட்டுக்குப் போய் பூசை பண்ணி எடுத்து வருவார். எந்த மூங்கிலில் என்ன செய்யலான்னு அவருக்கு மட்டும்தான் தெரியும்” என்ற வரிகள் பாண்டிச்சி புதினத்தில் ராமு தாத்தா என்பவர் மூங்கில் மரப்பொருள் செய்வதில் வல்லவர் என்பதை அறிய முடிகிறது (Alli Fathima, 2022). மூங்கில் மரத்தை வெட்டுவதற்கு முன் பூசை பண்ணி வெட்டுவதன் மூலம் இயற்கையின் மீது எவ்வளவு அக்கறையும் நேசிப்பும் உள்ளதை நாம் காண முடிகிறது.

“மூங்கில் பூத்திருச்சு சாமியோ… மேலே காட்டுப் பக்கமெல்லாம் மூங்கில் பூத்திருச்சு… ஓ… ஓ… தேவிநாச்சியோ… மூங்கில் பூத்திருச்சே! எங்கிருந்தோ முருகனின் குரல் உற்சாக அலறலாய் ஒலிக்க நடப்பதை நம்ப முடியாமல் ஒருகணம் திகைத்து மறுகணம் சிலிர்த்த மனங்கள்… கோ… கோ… கோ… என்று கூச்சலிட மகிழ்ச்சி முளையரிசியாய்ச் சிதறியது காடெங்கும்.” என்ற பாண்டிச்சி புதினத்தில் சந்ததி தீபம் ஏற்றும் வழக்கம் உள்ளது (Alli Fathima, 2022). சந்ததி தீபம் இறந்தோர்க்கு தன் பெண் பிள்ளைகளால் அம்மாவாசை அன்று விளக்கு ஏற்றுவது ஆகும். கள்ளம் கபடமற்ற எண்ணத்துடன் தீபம் ஏற்றனும். அவ்வகையில் பாண்டிச்சி செல்வன் என்பவன் மீது காதல் கொண்டு தீபம் ஏற்றாமல் அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது மூங்கில் மரம் பூத்ததால் இயற்கை மன்னித்து விட்டது என்று மகிழ்ச்சியில் உள்ளனர்.

## முடிவுரை

தொல்காப்பியர் நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐம்பெரும்பூதங்களில் அடங்கியது என்று கூறியுள்ளார். அல்லி பாத்திமா எழுதிய பாண்டிச்சி புதினத்தில் மக்கள் இயற்கையுடன் மிக தொடர்பு கொண்டுள்ளனர். இந்த நிலத்தான் எங்கள் வாழ வைக்கும் தெய்வம் இங்க இருக்குற ஒரு புல் பூண்டக்கூட மண்ணுட்ட மன்னிப்பு கேட்ட பிறகுதான் பறிப்போம் என இயற்கையுடன் வாழ்கிறார்கள். மனிதன் இயற்கையான வீடு அமைத்து வாழ்ந்துள்ளான். மண், காற்று தன் தெய்வமாக எண்ணி வழிப்பட்டுள்ளான். மூங்கில் மரத்தை வனதேவதையாக எண்ணி வழிப்பட்டுள்ளான். இதனையெல்லாம் காணும் பொழுது மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு மிக நெருங்கியுள்ளது என்பதை இக்கட்டுரையின் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

## References

Alli Fathima, (2022) Paandichi, Ezhuthu Pirasuram, Chennai, India

Bharathidhasan, (2005) Bharathidhasan Padalkal, New Century Book House, Chennai, India

Bharathiyar, (2019) Bharathiyar Kavithaigal, Visa Publications, Chennai, India

Subramanian, S.V. (2008) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License